**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **CC.No. 156/2018**

Prosecution witness : 2

| | | | |
|---|---|---|---|
| Name: | நல்லு | Caste: | |
| Father'sName: | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Accused present.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of** 1873 **on the day of** 26.02.2026

**முதல் விசாரணை**:

நான் தற்போது தேனி மாவட்டம் பெரியகுளம் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளராக பணியில் உள்ளேன். கடந்த 14.07.2016ம் வருடம் அவணியாபுரம் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது நான் சார்பு ஆய்வாளர்-ஜெயராஜ், சிறப்பு சார்பு ஆய்வாளர்-வேலுசாமி ஆகியோர்களுடன் காலை 11.00 மணிக்கு ரோந்து அலுவல் செய்துகொண்டிருந்தபோது எனக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் வெள்ளக்கல் பஸ்நிறுத்தத்தில் கையில் **ஸ்ரீ**தங்கமீனாட்சி ஜுவல்லர்ஸ் என எழுதப்பட்ட ஒரு கட்டைப்பையுடன் நின்றிருந்த ஒருவர் போலீஸ்பார்ட்டியை கண்டதும் ஓட எத்தனித்தபோது அவரை பிடித்து விசாரிக்க தனது பெயர் தங்க பெருமாள், வயது 65, த/பெ.ராமசாமி, மேற்கு தெரு, வெள்ளக்கல், மதுரை என கூறிய நபரிடம் உம்மிடம் அரசால் தடைசெய்யப்பட்ட மனிதஉயிருக்கு கேடு விளைவிக்கும் போதைப்பொருள் இருப்பதாக சந்தேகப்படுகிறேன் என்று கூறி உம்மை சோதனை செய்ய நீதித்துறை நடுவரிடமோ அல்லது அரசிதழ்பதிவு பெற்ற அதிகாரியிடமோ அழைத்து செல்லவா என்று கேட்டபோது தாங்களே சோதனையிடலாம் என்று கேட்டபோது தாங்களே சோதனை யிடலாம் என்று கூறியதால் 11.30 மணிக்கு சோதனை சம்மத கடிதம் தயார் செய்து மேற்படி நபரை சோதனையிட அவரிடம் சுமார் 5கிராம் எடையுள்ள 300 கஞ்சா

பொட்டலங்கள் இருந்தது. மேற்படி பொட்டலங்களில் 10 பொட்டலங்களை சாம்பிளுக்காக ஒரு காக்கி பேப்பரில் மடித்து அதை நூலால் கட்டி, போலீஸ்பட்டன் சீல் வைத்தேன். மீதம் உள்ள 290 பொட்டலங்களை கட்டைப்பையுடன் மற்றொரு காக்கி பேப்பரில் கட்டி, போலீஸ்பட்டன் சீல் வைத்தேன். அந்த இடத்தில் தனி நபர் சாட்சிகள் யாரும் முன் வராததால் போலீஸ்சாட்சிகளாகிய சார்பு ஆய்வாளர்-ஜெயராஜ், சிறப்பு சார்பு ஆய்வாளர்-வேலுசாமி ஆகியோர்கள் முன்பு 12.00 மணிக்கு அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றிஎதிரி மற்றும் சொத்துக்களுடன் 13.00 மணிக்கு நிலையம் வந்து அவணியாபுரம் காவல்நிலைய குற்ற எண். 1448/16, ச/பி.8(c) r/w 20(b) (ii) (B)NDPS ACTன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி கைப்பற்றப்பட்ட சொத்துக்களை படிவம்-91மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். 11.08.2016ம் தேதி கைப்பற்றிய சொத்துக்களுக்கு RPR.No.230/16 பெற்றும் 12.08.2016ம் தேதி நீதிமன்றத்தின் மூலமாக கைப்பற்றப்பட்ட சொத்துக்களுக்கு தடய அறிவியல் ஆய்வகத்திற்கு கொண்டுசெல்ல வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். 17.08.2016ம் தேதி ஆய்வறிக்கை பெற்று அந்த ஆய்வறிக்கையில் கெனபினாய்டுகள் இருப்பது கண்டறியப்பட்டதாக பகுப்பாய்வினர் திருமதி.ஹமீதாபேகம் அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இந்த வழக்கின் சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து அன்றே எதிரியின் மீது ச/பி.8(c) r/w 20(b) (ii) (B)NDPS ACTன் கீழ் குற்ற அறிக்கை தாக்கல் செய்தேன். இந்த வழக்கில் கைப்பற்றிய மீதம் உள்ள கஞ்சாவை பிரிவு 52(ஏ)ன் கீழ் அவணியாபுரம் தற்போதைய ஆய்வாளர் அழிக்கும்பொருட்டு வேண்டுகோள் கடிதம் கொடுத்து கனம் நீதித்துறை நடுவர் எண்.III அவர்கள் மூலமாக வழகக்கு சொத்தை அழிப்பு செய்யப்பட்டுள்ளது. சோதனை சம்மத கடிதம் அ.சா.ஆ.2 ஆகும். முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகும். படிவம்-91 அ.சா.ஆ.4 ஆகும். காவல் ஆய்வாளர் அவர்கள் கைப்பற்றிய கஞ்சாவை பகுப்பாய்வு செய்ய வேண்டி நீதிமன்றத்திற்கு அனுப்பிய வேண்டுகோள் கடிதம் அ.சா.ஆ.5 ஆகும். கைப்பற்றிய கஞ்சாவை பகுப்பாய்வு செய்ய வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு நீதிமன்றம் அனுப்பிய கடிதம் அ.சா.ஆ.6 ஆகும். பகுப்பாய்வு அறிக்கை அ.சா.ஆ.7 ஆகும். மீதம் உள்ள கஞ்சாவை பிரிவு 52(ஏ)ன் படி மதுரை நீதித்துறை நடுவர் எண் III

அவர்களுக்கு விசாரணை நீதிமன்றத்தால் கைப்பற்றிய கஞ்சாவை அழிக்க உத்தரவிடப்பட்ட உத்தரவு அ.சா.ஆ.8 ஆகும். பகுப்பாய்வு சென்று திரும்பிய கஞ்சா பொட்டலம் சா.பொ.1 ஆகும்.

**குறுக்கு விசாரணை**

எதிரி ஆஜர். சந்தர்ப்பம் அளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல
என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு
செய்யப்பட்டு வாசித்துக்காட்ட சாட்சியால் சரி
என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி
தென்மாவட்ட இனக்கலவர வழக்குகள்
விசாரணை நீதிமன்றம், மதுரை.

மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி
தென்மாவட்ட இனக்கலவர வழக்குகள்
விசாரணை நீதிமன்றம், மதுரை.